19 JAN 2011

Kavignan

# கவிஞன்

முற்றுமுழுதான மாதாந்தக் கவிதைச் சஞ்சிகை

இனி நீங்களும் விளையாடலாம் மொழியோடு

## அம்மா

அன்னைக்கோர் உவமை

அகிலமெல்லாம் தேடுகிறேன்

ஐயோ, பாவம்!

உவமைகள்

கொடுத்துவைக்கவில்லை!

~ மதன் ~



இதழ்-010 மார்கழித் திங்கள் 2010

அறிமுக விலை ரூபா-20.00

# Kavignan கவிஞன்

புதியவருக்காய் புதியவன் எழுதும் சிறிய மடல்,

உள்ளத்து உணர்வுகளை இரசனை மிக்கதாக உரைநடையினின்று சற்று ஏதோ ஒரு சுவையுடன் கூறின் நீங்களும் ஒரு கவிதைக்குச் சொந்தக்காரராகலாம்.

மரபை மீறக்கூடாது என்பதற்கப்பால், ஐந்நூறு அல்லது ஆயிரம் ஆண்டுகளுக்குப் பின் கூறக்கூடிய ஒரு **சிறந்த** மரபை அமைப்பதற்கு அத்திவாரமிடுவதில் குறையேதுமிருப்பதாய் எனக்கு எண்ணத்தோன்றவில்லை. ஏனென்றால் **இலக்கியம் இயம்பியதுதானே இலக்கணம்**. அவ்வாறாயின் உங்கள் கவிதைகளும் புதிதாய் ஒரு இலக்கணம் இயம்புவதில் என்ன தவறு?

இருந்தும் நான் மரபைக் குறைவாய் எண்ணுவதாய் அர்த்தமல்ல. அவையும் கவிதைக்கு அணிசேர்ப்பதற்காகவே உருவாக்கப்பட்டவை.

ஒரு கவிதையின் அல்லது ஒரு கவிஞனின் சிறப்பைக் கூறுவது இன்னுமொரு கவிஞனோ அல்லது இலக்கிய விமர்சகனோ இல்லை. அன்றி வாசகனாலேயே அப்பணி முழுமையாக முற்றுப்பெறுகிறது. ஒரு கவிஞன் கூறுவது அவனது சொந்தக் கருத்து மட்டுமே.

ஆக ஒரு புதிய படைப்பாளனுக்கு தனது படைப்புக்குக் கிடைக்கும் வெற்றி ஒரு புதிய வாசகனிடமிருந்து வரும் பாராட்டே அன்றி ஒரு இலக்கிய வாதியிடமிருந்து வரும் விமர்சனங்களன்று. ஆனால் அந்த ஒரு புதிய வாசகன் ஒரு இலக்கிய வாதியாகவும் இருக்க முடியும்.

~நன்றி~

“கவிஞன்”
கூட்டுறவுக்கடை வீதி,
புதுக்குடியிருப்பு-5(கீ.மா),
மட்டக்களப்பு,
இலங்கை.

'KAVIGNAN"
Co-op Road,
Puthukkudiyiruppu - 5 (E.P),
Batticaloa,
Sri Lanka.

மின்னஞ்சல்: kavignan@live.com

**வருடச் சந்தா ரூபா.300.00**
சந்தா தொகையினைக் காசுக்கட்டளை மூலமாக அனுப்பமுடியும்.
அனுப்பவேண்டிய தபாலகம் : புதுக்குடியிருப்பு
முகவரி : ச.மதன், கூட்டுறவுக் கடைவீதி,
புதுக்குடியிருப்பு(கீ.மா),மட்டக்களப்பு.

அன்புடன்
ஆசிரியர்





Kavignan கவிஞன்

தோற்றம்: 27. பங்குனி. 2010

010

20 மார்கழி 2010

ஆசிரியர் :சதாசிவம் மதன்
தொ.பே :0094 773620328
முகவரி :கூட்டுறவுக்கடை வீதி,
புதுக்குடியிருப்பு-5(கீ.மா),
மட்டக்களப்பு,
இலங்கை.
மின்னஞ்சல்: kavignan@live.com

## உள்ளே....

அறிமுகப் புதுமுகம்.
இம்மாதப் பிரபலம்.
தேயிலைத் தோட்டத்துப் பூங்குயில்கள்
கவிதைத்துளிகள்.
கவிதைச் சமர்.
மாதம் ஒரு கீதம்
தவ(று)றி விடாதே!
கைது செய்
நத்தார் பிறந்தது
மார்கழியின் மன்மதன்
அம்மாவுக்கு நன்றி
விழித்தெழுவோம்
அன்னையே உனை ஆராதித்து வணங்குகிறேன்
அகத்தில் அமர்ந்தவை .
மேசைக்கிறுக்கல் .

கொழும்பு தமிழ்ச் சங்கம்
நூலகம்

## சிந்தனைக்கு...

“ஆர்வம் மட்டுமே ... கவிதைக்கு முதலீடாகாது. கவிதையின் ஆழ அகலங்களை அறிந்து கொள்ளுகிற வேட்கையும் தேடல்களுமே ஒரு கவிஞனை முழுமைப்படுத்தும்”

வெறும் ஆவல்களால் எழுதப்படுகின்ற வரிகளெல்லாம் கவிதையாகிவிடாது. மானிட அசைவியக்கத்திற்கு ... ஆளுமையுள்ள கவிதைகளின் வெளிப்பாடுகளே அவசியம்.

“கவிஞர்-நீலாபாலன்”

# அறிமுகப் புதுமுகம்



***முழுப்பெயர்*** : இராமசாமி லிங்கேஸ்வரன்.

***முகவரி*** : கல்லுல்ல,
மடுல்சீமை,
பதுளை.

***பிறந்த திகதி:*** சித்திரை 19

***கல்வி கற்ற பாடசாலை:***

பது/சரஸ்வதி தேசிய கல்லூரி

***இப்போது எழுதுவது:***
ஊவா வானொலி, கவியரங்கு, பத்திரிகை

***எழுத விளைவது:***
சமூக அவலங்கள்

***குடும்பம் :*** மனைவி , இரு பிள்ளைகள், அம்மா
அக்கா

***பிடித்த கவிஞர் :*** எம்மவர் நிலாபாலன்

***தொலைபேசி இல :*** 055 35 66784

## தேர்தல் வரும் போது

காந்தியமும் காருண்யமும்
கள்ளிச் செடிகளுக்குள்
சிக்கிச் சீரழிகின்றது
சுதந்திரமும் சூழ்ச்சிகளால்
சூறையாடப்படுகிறது.

மந்திரமும் தந்திரமும்
சமயம் பார்த்து
சண்டித்தனமும்
வழங்க வாய்ப்பற்ற
வாக்குறுதிகளும்
இசை நிகழ்ச்சிகளும்
ஏகப்பட்ட போஸ்டர்களும்
தேர்தல் முடியும்வரை
தினமும் "பார்ட்டிகளும்"
தெருவெல்லாம் திரிந்து
தேடித்தேடிக் கும்பிடுவதும்
தில்லு முல்லுகளும்
தேவையற்ற வேலைகளும்
கட்சித் தாவல்களும்
கழுத்தறுப்புகளும்
வெற்றி கிட்டும் வரை
வீறாப்பு வார்த்தைகளும்
பேசுகின்ற பெரியவர்கள்
பதவி கிடைத்தலும்
பஜரோவில் பறக்கிறார்கள்

(தொடர்ச்சி பக்கம் 10 இல்)

**அறிமுகப் புதுமுகத்தில் அறிமுகமாக விரும்புவோர் தங்களது ஆக்கங்களுடன் அண்மையில் எடுத்த புகைப்படமொன்றை தபால்மூலம் அல்லது மின்னஞ்சல் மூலம் அனுப்பிவைக்கலாம்**





# இம்மாதப் பிரபலம்

## ஆ.மு.சி.வேலழகன்



கவிஞர் ஆ.மு.சி வேலழகன் என அடைமொழியிட்டு அவரது ஆற்றல்களை ஒருமுகப்படுத்தப்பட்ட சிறையில் நோக்க கவிஞன் முற்படவில்லை. ஏனென்றால் கவிதை மட்டுமன்றி உரைச்சித்திரம், சிறுகதை, நாவல் , ஆய்வு என பன்முகப்படுத்தப்பட்ட படைப்புகளில் தனது பெயர்களை இலங்கையில் மட்டுமன்றி பிற நாடுகளிலும் பொறித்துக் கொண்டிருக்கிறார் ஆ.மு.சி வேலழகன் அவர்கள்.

கவிதை நூலுக்கான (செங்காந்தள்) இலங்கை சாகித்திய விருது பெற்ற **ஆதிநாராயணன் முத்து சின்னத்தம்பி வேலழகன்,** (ஆ.மு.சி.வேலழகன்) இலங்கைப் போக்குவரத்துச் சபையில் சாரதியாகப் பணியாற்றி ஓய்வு பெற்றவர். 1972 முதல் இன்றுவரை பன்னிரெண்டு நூல்களை எழுதி வெளியிட்டுள்ள இவரது சாதனை ஆச்சரியப்படவேண்டியதுடன் கௌரவிக்கப்பட வேண்டியதுமாகும். அதுமட்டுமல்லாமல் ஒரே தடவையில் இன்னும் நான்கு நூல்களை இவர் வெளியிடவுள்ளார் என்பதும் இங்கு குறிப்பிடப்படவேண்டிய ஒன்றாகும். இவ் வெளியீடு இனிதே வெற்றிபெற கவிஞன் தனது வாழ்த்துக்களைப் பகிர்ந்து நிற்கிறது.

இவரின் படைப்புகளுக்குக் கிடைத்த வெற்றிகளாக ஏலவே கூறப்பட்ட செங்காந்தள் நூலுக்காக சாகித்திய விருது, தமிழ்நாட்டின் அமைச்சரும் பேராசிரியருமான க.அன்பழகன் அவர்களால் காந்தி காமராஜ் மண்டபத்தில் 1996.05.09 ஆம் திகதி வழங்கப்பட்ட பொன்னாடைக் கௌரவம், கொழும்பில் 'சிலோன் யுனைட்டட் ஸ்ரேஜ்' நிறுவனத்தினரால் 12.09.1999 அன்று வழங்கப்பட்ட இலக்கியத்திற்கான விருது, 2003, 2004 இல் மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர்களால் சான்றிதழ் வழங்கிக் கௌரவிக்கப்பட்டமை மற்றும் 2006 இல் இந்து சமய கலாசாரத் திணைக்களத்தினால் 'கலாபூசணம்' விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டமை போன்றவற்றைக் குறிப்பிடலாம். அதுமட்டுமல்லாது அவரது நாவல்கள் சில பட்டப்படிப்புகளுக்காக பேராசிரியர்களால் ஆய்வுக்குட்படுத்தப் பட்டிருப்பதும் இவரது படைப்பின் தன்மையைப் பறைசாற்றுகின்றன.

இவர் எழுதி வெளியிட்ட நூல்கள்....

1. தீயும் தென்றலும் (கவிதைத் தொகுதி)
2. சாதியா சதியா (உரைச்சித்திரம்)
3. உருவங்கள் மானிடராய் ( கவிதைகள்)
4. கமகநிலா (சிறுகதைத் தொகுதி)
5. வேலழகன் கவிதைகள்(கவிதைகள்)
6. மூங்கில் காடு (சிறுகதை)
7. விழியும் வழியும் (கவிதைகள்)
8. சில்லிக்கொடி ஆற்றங்கரை (நாவல்)
9. கோடாமை சான்றோர்க்கணி (நாவல்)
10. செங்காந்தள் (கவிதைகள்)
11. இவர்கள் மத்தியிலே (நாவல்)
12. கேட்டுப் பெற்ற வரம் (சிறுகதைகள்)

தான் எழுதிய கவிதைகளுள் தனக்கு மிகவும் பிடித்த கவிதையாக செல்வத்துள் செல்வம் எனும் கவிதையைக் கூறுகிறார் கவிஞர்.

# செல்வத்துள் செல்வம்
## (செல்ல மகன்)

– ஆ.மு.சி.வேலழகன் –

நீதி நேர்மை நிலை கொள்ள
  நீண்ட ஈண்டாய் என் மகனார்
பாதி இரவிற் கண்விழித்தும்!
  பகலில் முழுதும் பசித்திருந்தும்
ஓதி உணர்ந்த பயனாக
  ஒறுத்துச் சுகங்கள் அனைத்துமே
ஆதி அன்னை தந்தையுடன்
அன்புத் தம்பி மார் நலனை

எண்ணி என்றும் தனை வருத்தி
  ஏற்றங் காண உழைத்த மகன்!
கண்ணியத்தின் தலைமை மகன்
  கருணா நிதிபோல் பிறருண்டோ?
சின்ன வயதும் பின்னுந்தான்
  சினந்து நானோ அடித்தேச
என்னை இகழ்ந்து மனம் நொந்து
  என்றும் நடந்து அறியாதான்

சொன்ன எதையும் அலட்சியமாய்
  சோரவிட்டுச் சுகந்தேடி
தன்னைக் காக்கும் எண்ணத்தால்
  தஞ்சம் தேடி அலையாதான்!
அன்னை வடிவாம் உளப்பண்பும்
  ஆற்றல் அலையாய் நிதம் பொங்கும்
மன்னன் எந்தன் மகன் போல
மற்றுமொருவர் உண்டோதான்?

தந்தை தாயைச் சகோதரரை
  தக்கோராக எண்ணாமல்
சிந்தை தன்னில் தனைமட்டும்
  சிறப்பாய் எண்ணி நடந்திருந்தால்
முந்தையோரின் நாடான
  மூத்த தமிழாள் தலைநகரில்
விந்தை எண்ணி விழியகல
  விதமாம் விதமான கார்களுடன்

சந்தைப் பொருட்கள் தலை நீட்ட
  சந்தோ சமதாய் வாழ்வீட்டை
நிந்தை சொல்லா வகையாக
  நிமிர்ந்தே நிற்கும் மாடிமனை!
மன்றே மதிக்கும் மகனாம் இம்
  மண்ணை மிதித்த பின்னே தான்
நன்றே நானும் பலபேரும்
  நலமாய் வந்து தங்குகிறோம்.

(வேறு)

வான்புகழ் எய்தும் வண்ணம்
  வாழ்வினை அமைக்கத் தம்பி
கான்எனும் வாய்க்கால் வெட்டி
  கழனிக்கு நீரே தந்தும்
தான்மட்டும் மேலிருந்து
  தமிழ்நாட்டிற் குதித்தல் போலே
"சீன்" மாறும் நடிப்புமன்றாச்
  சிறுமதியுளோர்சொல் வாரோ?





# தேயிலைத் தோட்டத்துப் பூங்குயில்கள்

கவிதாயினி
[illegible]

மார்கழி – 12 ஆம் திகதி கொண்டாடப்பட்ட சர்வதேச தேயிலை தினத்தை முன்னிட்டு இக்கவிதை வெளியாகிறது

தேயிலைத் தோட்டத்துப் பூங்குயில்களே – உங்களைத்
தேடினேன் கொஞ்சம் நில்லுங்களே.
ஒயிலாடும் தோட்டத்துத் தேவதைகளே – நீங்கள்
ஒரு நிமிடம் சோகம் சொல்லுங்களேன்.

வெயில் வந்து தூங்கிடும் குளிர்களே – குளிர்ப்
பனிவந்து தூங்கிடும் பயிர்களே
பயிர் வந்து தூங்கிடும் மலைகளே – தினம்
துயில் வந்து தூங்காத விழிகளே.

மலையோரம் ஊர்ந்தோடும் ஈரங்களே – வந்து
விழியோரம் சேர்ந்தோடும் பாருங்களே
தலையோரம் கயிரோடும் தூரங்களே –தேய்ந்து
நிலை மாறும் மடுவாகும் பாருங்களே.

ஈரைந்து கிலோமீற்றர் மலைமேலே – ஒரு
நாள்தோறும் நடக்கோணும் பாருங்களே
ஈர்பத்துக் கிலோகிராம் தேயிலைகளே –ஒரு
நாள் போதும் பறிக்கோணும் பாருங்களே.

கொழுந்துகள் பறித்திடும் கரங்களே – கருந்
தழும்புகள் கைசேரும் கணங்களே
கூடையால் கூனலேறும் முதுகுகளே – மலை
நாட்டோட முதுகெலும்பும் நீங்களே.

இரத்தங்கள் உறிஞ்சிடும் அட்டைகளே – மனித
உருக்கொண்டு உழைப்பினை உருஞ்சுங்களே
துரத்துங்கள் வாழ்க்கையின் அடிமட்டங்களே – இந்த
உருத்தேய்ந்தாலும் பிறையாக ஒளிருங்களே.

லயத்தோரம் வாழ்ந்திடும் குயில்களே – கங்காணிமிடம்
சுயகௌரவம் இழக்காது வாழுங்களே
வயித்தோரம் தவழ்ந்திடும் பிள்ளைகளே – கல்வியால்
உயர்ந்த தேற்றம் பெற்றிட்டால் இன்பங்களே.

# கவிதைத் துளிகள்

## அமாவாசை

நிலவுக்கு அன்று
மாதவிலக்கு
அதனால்தான் அது
வெளியில் வர மறுக்கிறது!

## அனுபவம்

மரம் - தலைசாய்ந்து
பார்த்திருக்கிறேன்
பூக்கள் தலைசாய்ந்து
பார்த்ததில்லை
நீ தலை சாய்திருக்கையில்
அந்த அனுபவத்தையும்
நான் பெற்றுக்கொள்கிறேன்!

**தர்மகீர்த்தி தனுஷன்**
**12 ஆம் குறுக்கு**
**திருப்பெருந்துறை**
**மட்டக்களப்பு**

## தவிப்பு

இனிமையான இரவில்—உன்
இதழ்களின் அசைவில்
நினைத்தேன் – நீ
என் விழிகளை
குளிக்கவைப்பாய் என்று
இரு நாட்கள் கழிந்தும்
உணர்ந்து கொண்டேன்—உன்
இதழ் அசைந்தது
விழி குளிக்க அல்ல
இதயம் தவிக்கவென.

**சி.சுதர்சன்**
**புதுக்குடியிருப்பு.**
**மட்டக்களப்பு.**

அன்பான வாசகர்களே,
"கவிஞன்" இதழின் வளர்ச்சிக்கும் தொடர்ச்சிக்கும் உங்களது ஆதரவை எதிர்பார்க்கின்றோம். நீங்களும் இன்றே சந்தாதாரராவதோடு உங்கள் நண்பர்களுக்கும் அறிமுகப்படுத்துங்கள்.
-நன்றி-







## கவிதைச் சமர்

"வார்த்தைகள் உரசும்போது
வண்ணக் கவி உருவாகும்"

# வாழும் கவிதை

விண்ணைத் தழுவும்
இமயம் போல்...
மேன்மை பெற்ற கவியின்பம்...
எண்ணம் நிறைத்து உணர்வுகளில்
ஊறித் திளைத்தல் இங்கிதமே...!

கண்ணை இமையும்
காப்பது போல்
கவியின் மரபைக் காத்தவர்கள்
பண்ணித் தந்த பாப்படையல்
பருகப் பருகத் தெவிட்டாதே!

உலகப் பரப்பில்
மழைத்துளிபோல்...
இனிய கவிதை பொழிந்தவர்கள்...,
மலரும் சுகந்த மலராக
மனிதர் மனத்துள் மணப்பாரே...!

எழுதி ...எழுதிக்
குவிப்பவைகள்...
எல்லாம் நிலைத்து வாழாது...!
பழுதில்லாமல் பக்குவமாய்
பண்ணும் கவிதை நிலைபெறுமே...!

ஓசை... இயைபு...
சொல்லாட்சி...
ஓடும் நதிபோல் பா... அமைதி...,
மாசில்லாத நற்கருத்தில்
மலரும் கவிதை மாண்புறுமே...!

புதிய செய்தி
கொண்டுவரும்...
புதுக்கவிதையும் மனம் நிறைக்கும்...,
அதுவும் உண்மைக் கவிஞனவன்
வண்ணக் கருவில் உருப்பெறுமே..!

**முல்லை வீரக்குட்டி.**
**3 ஆம் குறுக்கு.**
**ஜே.பி வீதி.**
**தம்பிலுவில்-01.**

*சிறந்த கவிதைகள்*
**மரபுக் கவிதையா? புதுக்கவிதையதா?**
என்று உங்கள் கருத்துக்களை கவிதையாக்கி அனுப்புங்கள்

# மாதமொரு கீதம்

**இம்மாதக்கீதம்**

தாண்டியடி விக்னேஸ்வர வித்தியாலயம்.

**இயற்றியவர்**

திருமதி.ஜெகதீஸ்வரி நாதன். (தம்பிலுவில் ஜெகா)

**நிலை பெறு புகழுடை வரலாற்றுத் தலமாம்**
**சங்கமன் கண்டியதில்**
**மலை வளம் மிகுந்த மருதமும் சூழ்ந்த**
**மானிலம் தாண்டியடி**
**விக்னேஸ்வரா வித்தியாலய**
**வனப்புறு கலாசாலை**
**வாழ்க! வாழ்க! வாழியவே!**

**செந்நெற் கதிருடன் செந்தமிழ் இணைந்த**
**சீருடன் வளர் பதியில்**
**கணபதியருளால் கல்வியும் கலைகளும்**
**கதிரவன் போல் மிளிர்க**
**தேசுறு ஆசான் மாணவ மணிகளும்**
**வாழ்க! வாழ்க! வாழிய வாழியவே!**

---

## மதிற்பிற்குரிய அதிபர்களே! ஆசிரியர்களே!

இப்பகுதியில் உங்கள் பாடசாலையின் கீதமும் இடம்பெற விரும்பினால், உங்கள் பாடசாலை கீதத்துடன் அதை இயற்றியவர் பற்றிய சிறு விபரத்தையும், உங்கள் பாடசாலையின் மாணவரிடமிருந்து பெற்ற ஆக்கங்களையும் அதிபரின் உறுதிப்படுத்தலுடன் எமக்கு அனுப்பிவையுங்கள். இதன்மூலம் கவிஞனின் கலாசாலைக்கீதங்கள் தொகுக்கும் மற்றும் ஆவணப்படுத்தும் செயற்றிட்டத்தில் நீங்களும் இணைந்து கொள்ளலாம்.

-நன்றி-





# தவறு(றி) விடாதே!

கற்றதனால் அறிவிருந்து என்ன பயன்
கடவுளும் கண்மூடும் காட்சி பல
தற்பெருமை பறைசாற்றும் தரணியிலே
தகாத செயலுக்குப் பஞ்சமுண்டோ
கற்காலப் பண்பாடா நடக்குதிங்கே
காலத்தின் மாற்றமாம் கேள்வி கேட்டால்
இக்காலம் அழிகின்ற கலியுகமே
இருளகற்றி ஒளியேற்ற எழு மகனே!

ஆசைகள் அதிகரித்தால் அழிவுகள்தான்
ஆறறிவைப் பயன்படுத்து ஒருமுறையேல்
பூசைகள் புண்ணியங்கள் புரிகின்றார்கள்
புகழற்ற செயலொன்றை மறைப்பதற்காய்
காசையெண்ணி கடவுளையே மறந்துவிட்டு
காலன்வர கண்மூடித் தியாணித்தால்
ஓசையொலியானவரும் அருள்வாரா?
ஒருபொழுது சிந்தித்துப் பார்மகனே!

விஞ்ஞான உலகினிலே விந்தை பல
வியந்திடும் அதிசயங்கள் நடக்குதிங்கு
மெஞ்ஞான உண்மையினை உணராமல்
மேதினியில் மானிடர்கள் வாழுகின்ற
அஞ்ஞான வாசமான வாழ்வை விட்டு
அழியாத வரலாறு படைத்திடுவாய்
கொஞ்சம் நீ யோசித்து நட மகனே!
குறைவற்று இப்புவியில் வாழ்மகனே!

நல்லொழுக்கம் நமக்கிருந்தால் நாலு பேரும்
நல்லவனாய் போற்றிடுவார் நானிலத்தில்
இல்லறத்தில் தூய்மையினைக் கடைப்பிடித்தால்
இன்பமாய் இருந்திடலாம் இந்நிலத்தில்
சொல்லாதே சமூகத்தை குறை நீயும்
சொட்டு வுன்னுள்ளத்தை மாற்றிவிடு
பொல்லாத செயலுடன் பொய் களவை
பொசுக்கிவிட்டு எழுந்து வா நல் மகனே!

ஆணுக்கும் பெண்ணுக்கும் கற்புண்டு
அதைத்தெருவில் விலைபேசி விற்காதீர்
மானுக்கே மயிர் விழுந்தால் வாழாதாம்
மானத்தில் கவரியினை மனதிலெண்ணி
தேனுக்கும் பாலுக்கும் ஆசைகொண்டு
தேவையற்ற வாழ்விலே தேகம் நொந்து
சாணுக்குள் சறுக்கிவிட்டேன் கதையளந்தும்
செத்தாலும் வரலாறு மாறிடாதே!

**--கதிரவன்--**

பக்கம் 3 இன் தொடர்ச்சி....


முண்டு கொடுத்த தொண்டர்கள்
முடக்கப் படுகிறார்கள்
பஞ்சம் களைய
பதவி கேட்டு விண்ணப்பித்தால்
லஞ்சம் கேட்டு கெஞ்சுகிறார்கள்
கலையும் விளையாட்டும்
கல்வியும் வளர்க்காமல்
கஷ்டங்களைக் கொடுத்துவிட்டு
கலகலப்பாய் இருக்கிறார்கள்
அகிம்சைக்கு ஆணியடித்து
அடக்கி ஆனந்திக்கிறார்கள்
தடுக்கி விழும்போது இவர்களை
தாக்கிட வேண்டாம்.

அரிசி விலையை அதிகரிக்க
ஆசைப்படும் அரசும்
மாவுக்கு மானியம் தர
மறுக்கின்ற மந்திரிகளும்
தேர்தல் வருகையில் – எம்மை
தேடத்தான் போகிறார்கள்
புத்தியுள்ளவர்கள் அவர்களை
மொத்தமாய் தோலுரிப்போம்
இல்லையேல் – எம்
இலக்குகள் எட்டப்படாமலே
இறந்து போம்.

**- மடுல்சீமை மைந்தன் -**

2011 ஆண்டுக்கான கவிஞன் சந்தாதாரராக விரும்புவோர் மற்றும் தங்கள் பகுதிகளில் கவிஞன் சஞ்சிகையினை விநியோகிக்க விரும்புபவர்கள் கவிஞன் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.

# கைது செய்...!



கண்களால் காதல் செய்
கைகளால் கைது செய்
கவர்ந்துகொண்டு போ...!

சோக வனத்துள்
இன்னும்
சிறையிருக்க முடியவில்லை
சிக்கலாக இருக்கிறது...!

விடிகாலைப்
பொழுதுகள் தானும்
விஷங்களைக் கக்கிவிட்டே
விலகிப் போகிறது இன்னும்...!

நிலவும்
நெருப்பாகச் சுடுகிறது
தென்றலும்
தீயாகத் தகிக்கிறது
மனசோ
வெந்து தவிக்கிறது...!

கனவுகளையும்
கை கூட விடாது
காலமானது
கைதுசெய்துகொண்டே
தினமும் தொலைகிறது...!

விடிவெள்ளிக்குத்
தானும் – எங்களது
வேதனைகளெங்கே
விளங்கப் போகிறது...!

காயங்களை
உடுத்திக் கொண்டே
காலங்களைக்
கடத்துகின்றோம்
கண்ணீரிலே
வாழ்வை இங்கே
நடத்துகிறோம்...!

அதனால்தான்
கூறுகிறேன்
காலனே...
நீயாவது நெருங்கி வா!


கண்களால் காதல் செய்!
கைகளால் கைது செய்
கவர்ந்து கொண்டு போ!

அப்போதாவது
காயங்கள்
ஆறிவிட்டுப் போகட்டும்.

கன்னிமுத்து வெல்லமதிமாறன்
(சரவணமுத்து நவேந்திரன்)
170/B சேனநாயக் வீதி,
பாண்டிருப்பு -01,
கல்முனை.








## நத்தார் பிறந்தது

பாலன் ஜேசு பிறந்த நாள்
ஞாலம் மாசு மறந்த நாள்
ஞானிகள் வானில் நட்சத்திரங் கண்ட
மேதினி பேணிய சிறந்த நாள்

உற்றாருறவினர் சுற்றமுங் கூடிடும்
நத்தார் எனுந்திரு(ப்) புனித நாள்- மாதா
மரியாள் மகிமையும் புரியவைத்திடும்
நாள்களுக்கெல்லாம் அரிய நாள்

கறை போக்கிடுவோமொளி ஏற்றிடுவோம்
நிறை கூறியே மாறிநாம் வாழ்ந்திடுவோம்
சிறை மீட்டு எங்கள் மறை காத்த மன்னன்
பறை சாற்றியே பாடிநாம் போற்றிடுவோம்

-மதன்-

## மார்கழியின் மன்மதன்

ஏர்பூட்டி வயல் கிழித்து
பார்வாழ வைக்கும்
மார்கழியில் நாள்
இருபத்தைந்து நள்ளிரவு நேரம்
உலகுய்ய,
உத்தமன் இயேசு
உதிக்கின்றான் சிசுவாக...
சன்னமாய்ச் சம்மனசுகளின்
கீத நாதமொலிக்க
வண்ணமயமான வால்நட்சத்திரம்
வான்வெளியை அலங்கரிக்க
பரமன் யேசு பாரிலுதிக்கின்றான்

தேரில் வர வேண்டிய தேவன்
மாட்டுத் தொழுவத்தில் மலர்ந்து
கார்முகிலிடைவெளியில்
பார்முழுதும் ஒளியாய்
மார்கழியின் மன்மதனாய்
உதயமாகும் நாளை
உவகையுடன் வாழ்த்திடுவோம்

-கிறிஸ்ரி-

# அம்மாவுக்கு நன்றி

-தம்பிலுவில் தயா-

அம்மாவுக்கு எப்படித்தான்
நன்றி சொல்வது
அவ அன்புக்குத்தான் ஆரும்
எந்த விலையும் சொல்வது
இந்த மண்ணில் என்னை வாழச்
செய்தவள் அவளே என்
இதயத்திலே வாழுகின்ற
தெய்வமும் அவளே

சும்மா இருக்கும் போதெல்லாம்
சுறுசுறுப்புத் தருவாள் - கல்வி
சுத்தமாக கற் பதற்கு
அறிவுரை தருவாள்
வீரங்கொண்ட கதைகள் தந்து
வீரநாக்கினாள் - நான்
வித்தகனாய் ஆக அவள்
வியர்வை சிந்தினாள்

தாயில்லாது ஒன்றுமில்லை
என்று காட்டிய - அந்த
தாய்க்கு நானும்
எப்படித்தான் நன்றி சொல்வது

அவ அன்புக்குத்தான் ஆரும்
எந்த விலையும் சொல்வது - அந்த
அம்மாவுக்கு எப்படித்தான்
நன்றி சொல்வது

நோயிலாது வாழ அவள்
மருத்துவரானாள் - மனம்
நோகும் போது என்னை அவள்
கரத்தில் ஏந்தினாள்- இந்த
மண்ணில் என்னை வாழச் செய்த
தாயும் அவளே -என்
இதயத்தில் வாழுகின்ற
தெய்வமுமவளே
தாயில்லாது ஒன்றுமில்லை
என்று காட்டிய - அந்த
தாய்க்கு நானும்
எப்படித்தான் நன்றி சொல்வது
அவ அன்புக்குத்தான் ஆரும்
எந்த விலையும் சொல்வது - அந்த
அம்மாவுக்கு எப்படித்தான்

# விழித்தெழுவோம்




அகதி முகாம்
சுருங்கிய உலகம்
புதிய சாதியாய்
பரந்திடும் அகதிகள்
அன்பு செலுத்திட
அனைவருக்கும் துப்பாக்கி
அமைதி காத்திட
அணுவிலே ஆயுதம்
சுதந்திரம் காக்க
வெளிநாட்டுக் கடனுதவி
உலக அடிமையாய்
உயிர்வாழும் நாம்
நிர்ப்பந்தக் கருக்கட்டி
பிரசவிக்கும் ஒப்பந்தம்
ஓரினச் சேர்கையின்
விருத்தியில் மனுக்குலம்
நாளை உலகம்
நம்மிடம் நிர்மூலம்
அணிசெய்வோம் மனிதம் வாழ!

**கே.ஜான்சி**
**அன்னமலை - 02**
**கல்முனை**





# அட்டைப்படக் கவிதை



**அன்னையே உன்னை ஆராதித்து வணங்குகிறேன்**
**ஐயிரண்டு திங்கள் என்னை அன்போடு நீ சுமந்து**
**கண்ணை இமை காப்பதுபோல் பகலிரவாய்க் காத்து நின்று**
**உவகையால் எனை அணைத்து உன் உதிரப்பால் எனக்களட்டி**
**கையிரண்டில் எனையெடுத்துத் தமிழ் ஆராரோ... பாடல் பாடி**
**கள்ளமற்ற உன் விழியசைத்து என் கண்ணீரை ஒழிய வைத்து**
**புல்லரிக்கும் உன் பேச்சினிலே என் புன்னகையை வரவழைத்து**
**என் சிங்காரச் சிரிப்பதனில் சித்தமெல்லாம் நிறைவு கொண்டு**
**வையமதில் உயர்ந்து நிற்கக் கல்விக்கூடம் எனை அனுப்பி**
**கற்றவனாய்க் கொற்றவனாய் தெய்வம் நிறை பற்றவனாய்**
**நல்லவனாய் வல்லவனாய் பார்போற்றும் சொல்லவனாய்**
**ஏற்றி வைத்த என் தாயெனும் மணிவிளக்கே...!**
**எத்தனை ஜென்மம் நான் எடுத்துவந்த போதினிலும்**
**பத்து மாதம் சுமந்தவளே உன் பாதங்கள் போற்றி அம்மா**

*கந்தப்பெருமாள் பரமேஸ்வரி*
*தீபவாசா*
*குருக்கள் தெரு,*
*அக்கரைப்பற்று-7*

# அகத்தில் அமர்ந்தவை

பரிணாமப் பட்டுப் போன தமிழ் இலக்கிய உலகு கண்ட பன்முகப்படைப்பாளிகளில் சுஜாதா முக்கியமானவர். "ஹைக்கூ" வைத் தமிழில் அறிமுகப்படுத்தலில் முன்னின்ற சுஜாதா, கணையாளியில் கடைசிப்பக்கம் எனும் ஒரு தொகுப்பை 1990 களில் செய்து கொண்டிருந்தார். இவற்றில் சில மனது மறக்காத கவிதைகளை உங்களுடன் பகிர்வதில் அகமகிழ்வு கொள்கிறேன்.

" நடைபாதை பழம் விற்கும் கிழவியிடம்
குறுந்தடியின் வலிமைகாட்டி
பழம் பறிக்கும் போலீஸ்காரனைத்
தட்டிக் கேட்க முடியாத
கையாலாகாத் தனம்
கவிதை எழுதினால் அதிகமாகுமென்று
புரிஞ்சு போச்சோ மனசுக்கு"

ஹைக்கூ வாய் இல்லாவிட்டாலும் கனமான கதைசொல்லும் கவிதையென்பதால் மறையாது மனதிலே குடிகொண்டு விட்டது.

இன்னும்...

தண்டவாளத்துக்கிடையில்
புல்லின் நுனியில் பூத்த
மஞ்சள் பூவில்
வண்ணத்துப் பூச்சி

கடற்கரையில்
திரும்பிப் பார்க்கையில்
என் காலடிச் சுவடுகள் இல்லை

மறுமுறையும்
வரமாட்டார் யேசு
எல்லோர் கையிலும் சிலுவை

திண்ணையிலிருந்து
நிலவை ரசிப்போம்
தொலைந்தது வீட்டுச்சாவி

நன்றி :- கணையாளி
1990 - 1992
தொகுப்பு : 'கவிஞன்'








பழகும் முன் தனிமை
பழகியபின் இனிமை
பிரிவு என்பது கொடுமை
பிரிந்தால் தெரியும்
நட்பின் அருமை.

நிலவே நீ
தூரமானதால் - என்
நிழலும்
என்னைப் பிரிந்தது

கண்ணீரைத் துடைப்பது
கர்ச்சிப்
துன்பத்தைத் துடைப்பது
ப்ரண்ட்சிப்


என்
கண்ணுக்குள் தோன்றி
என் கண்ணைத்
திறந்தவளே!
இடந்தா!
உன்னுக்குள் நுழைய!

அழகில்லாமலேயே
என்னை
ஆட்டிப் படைப்பவளே!
உனக் கென்ன
விலை சொல்வேன் உன்
மனம் வெல்ல!

நிலவு மண்ணைச்
சுற்றுவதை நிறுத்தினாலும்
நான் உன்னைச் சுற்றுவதை
நிறுத்த மாட்டேன்!
இல்லையென்றால்
நாளைப்படி தினமும்
நிலவு காண்பது!

# நிறைமகள்

-வேதமுர்த்தி-



ஆடவர் கூட்டம்
ஆட்டங் கண்டது
அவர்கள் நோட்டம்
வேட்கை கொண்டது.
ஆட்டம் அரங்கேறியது
மாதவி ஆட்டத்தில் மயங்கிய
ஆடவர் கூட்டத்தை
மன்மத பாணங்கள் துழைக்க
உடல் பனிக்க
மனம் திளைக்க
கொண்ட மோகத்தின் தாகத்தை
அவள் தேகத்தில் தணிக்க
அவள் பாகத்தில் ஏகத்தில்
இடம் பிடிக்க
விழிகள் வேகத்தில் பறந்தன.

மாதவி விழிகள் பேசிய கதையால்
மஞ்சள் நிற இதழ்களின் சுளைகள்
வடிந்த தேன் துளியால்
அவள் கன்னத்தில் சின்னமாய்
விழுந்த அழகுக் குழியால்
கன தனக்கிண்ணத்தின்
வண்ணத்தால்
களி நடம் கொண்ட
பொடியிடை கண்ட எண்ணத்தால்
மன்னன் மந்திரிகள் கூட
மயக்கத்தால்...

(தொடரும்...)







# வாசகரிடமிருந்து கவிஞனுக்கு

**தம்பிலுவில் தயா**

*கவிஞனைக் கண்டேன் -அவன்*
*கவிதைகளை உண்டேன்*
*புதுமைகளை புவியதனில் படைத்து*
*புத்தொளி பரவ இக்கவிஞனுக்கு*
*என் வாழ்த்துக்கள்.*

T.கணநாதன்
முகாமையாளர்
பாட்லிட் பினான்ஸ் லிமிடட்
மட்டக்களப்பு

மட்டக்களப்பில் கலைவாணி கொடுத்த முத்தாம் புதுக்குடியிருப்பு தனில் உயிர்பெற்று, இலைமறை காய்களாய் இருந்த கலைவாணியின் செல்வங்களின் வரிகளை இதழ்களாகக் கொண்டு கவிஞன் எனும் நாமத்தில் மாதாந்த மலராக உருவெடுத்து வெளிவரும் கவிஞனே! நீ என்றென்றும் பல நூறு வருடங்கள் மக்களின் மனதை விட்டு அகலாமல் அகிலத்தை வலம்வர வாழ்த்துகிறேன்.


கவிவலன் அவர்கள் எழுதிய 'அர்த்தமுள்ளது மரபு' எனும் அர்த்தமுள்ள கவியினை வாசிக்கும் சந்தர்ப்பம் கிடைத்தது. அவருடைய பல கவிதைகளைப் பார்த்துப் பரவசித்திருக்கிறேன். வரிக்குக் கீழ் வரி போட்டால் முகவரியும் கவிதைதான் என்று வைரமுத்து கூறினார். அது போல வந்த வேகத்தில் சிந்தையில் தங்காமல் மறைந்துவிடும் புதுக்கவிதைகளில் விளக்கம் குறைவு என்று கவிவலன் கூறியிருக்கிறர். வார்த்தைக் கோர்ப்புக்களை வரிசையாக அடுக்கி மொழி நாகரிகத்தை குழிதோண்டிப் புதைக்கும் புதுக்கவிதைகளை இவர் கவிகள் கவலையோடு பார்க்கின்றன.

அற்புதமான ஒரு கவிஞர் மரபை உடைக்காது புதுமையைக் கொச்சைப்படுத்தாது வித்தியாசமான முறையில் கவி படைப்பதில் இவர் விற்பன்னர் அவர் ஆக்கியிருந்த கவிதை அறுசுவையாய் இனித்தது. ஊவா தமிழ்ச் சங்கத்தின் சார்பாக அவருக்கு வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

-மடுல்சீமை மைந்தன்-

## கவிதை நூல் அறிமுகம்

| | |
|---|---|
| நூல் | : "செங்காந்தள்" |
| ஆசிரியர் | : ஆ.மு.சி.வேலழகன் |
| வெளியீடு | : பாக்கியம் சிவசோதி பதிப்பகம் |
| முகவரி | : கலைமகள் வீதி. தாமரைக்குளம். தாழங்குடா. |
| முதற் பதிப்பு | : 2006 |
| விலை | : ரூ.130.00 |



Kavignan கவிஞன்


# சிவா மல்டி கொம்லக்ஸ்

பிரதான வீதி,புதுக்குடியிருப்பு. (பாடசாலைக்கு முன்னால்)

பாடசாலை உபகரணங்கள் மற்றும் பயிற்சிப் புத்தகங்கள் புலமைப் பரிசில் மாணவர்களுக்கான புதிய வெளியீடுகள் , போட்டோப் பிரதி லெமினேற்றிங் கொம்பியூட்டர் ப்பிரின்டிங் ஸ்கேனிங் Internet & E-Mail சேவை விளையாட்டுப் பொருட்கள்,பரிசுப்பொருட்கள், வாழ்த்தட்டைகள், புக் வைண்டிங்

**VCD, DVD Writing**

மற்றும் **Mobitel ,Dialog,Airtel Reload**

**Dialog, Mobitel, Suntel, SLT net, SLT Passport** போன்ற அனைத்து முற்கொடுப்பனவு அட்டைகளும் இங்கே பெற்றுக்கொள்ள முடியும்

தொடர்புகளுக்கு : 0770452861 , 0653641247

E- Mail : psnraj@yahoo.com




நகரும் நாட்களின் தொடரும் விடிவிற்காய் உங்கள் மனப்பதிவுகளை கவிஞன் எனும் காலக்கண்ணாடியில் தரவேற்றம் செய்து, உங்கள் ஆக்கங்களையும் காலத்தின் தேவையையும் கலையினூடு பகிர்ந்து கொள்ளுங்கள்

உங்கள் ஆக்கங்களை கீழுள்ள முகவரிக்கு அனுப்பி காலக்கண்ணாடியின் கோலப்புத்தகத்தில் நீங்களும் புள்ளி வையுங்கள்!!!

**அனைத்துத் தொடர்புகளுக்கும்:**


**"கவிஞன்"**
**கூட்டுறவுக் கடை வீதி,**
**புதுக்குடியிருப்பு - 5 (கீ.மா),**
**மட்டக்களப்பு,**
**இலங்கை.**
0773620328


நூலகம்

அனைத்து ஆக்கங்களுக்கும் படைப்பாளிகளே பொறுப்புடையவர்